DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.112/2015

PROSECUTION WITNESS L.W.18/P.W.15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Caste | : | |
| Father's Name | : | பழனிச்சாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

2 ம் எதிரி ஆஜர். 3 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 5 வரையிலான எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 27.08.2024

முதல் விசாரணை

1) நான் தற்போது ஈரோடு திண்டலில் குடியிருந்து வருகிறேன். நான் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன்.

2) கடந்த 13.07.2013 ம் தேதி, கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கருங்கல்பாளைய காவல்நிலைய குற்ற எண்.320/2013 சட்டபிரிவு 406, 420 இதசவின் படி சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் என்பவரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை புலன்விசாரணைக்கு பெற்றுக் கொண்டேன்.

3) சாட்சி கிரிசங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளான வினோத்குமார், ராம்கி, சதீஷ்குமார், அலாவுதீன் ஆகியோர்களை சாட்சிகள் அடையாளம் காட்டியதன் பேரில் ஈரோடு பூந்துறை ரோடு, செங்கோட்டையார் கல்யாண மண்டபம் அருகே உரிய காரணம் கூறி கைது செய்தேன். சாட்சிகள் நாட்ராயன், குழந்தைசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி வினோத்குமார் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 16.30 மணிக்கு பதிவு செய்து உரிய இடத்தில் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் நடந்த விவரங்களை உங்களிடம் சொல்லி என்னிடமிருந்த பணம் ரூ.1,15,000/- எனது டிவிஎஸ் ஸ்போர்க் மோட்டார் பைக், பதிவு எண். TN36 R 9931 செல்போன் 3, ATM கார்டு 5, SBI TINY கார்டு 44 மற்றும் பண பரிமாற்றம் குறிப்பு உள்ள டைரி ஆகியவைகளை உங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்று கூறினார்.

4) அதன்படி 17.45 மணிக்கு மேற்படி சாட்சிகள் நாட்ராயன் மற்றும் குழந்தைசாமி

ஆகியோர் முன்னிலையில் பணம் ரூ.1,15,000/- எனது டிவிஎஸ் ஸ்போர்க் மோட்டார் பைக், பதிவு எண். TN36 R 9931 செல்போன் 3, ATM கார்டு 5, SBI TINY கார்டு 44 மற்றும் பண பரிமாற்றம் குறிப்பு உள்ள டைரி ஆகியவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து உரிய கையொப்பம் பெற்றேன்.

5) 18.15 மணிக்கு, வழக்கில் கண்ட எதிரி ராம்கி என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நாட்ராயன் மற்றும் குழந்தைசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் அவர் தன்னிடமிருந்து ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களான பணம் ரூ.1,24,000/-, செல்போன் 1, ICICI வங்கி செக்புக் 1, பான்கார்டு 1, SBI ATM கார்டு 8, SBI பாஸ்புக் 1, ஆகியவற்றை 19.00 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகள் உரிய கையொப்பம் பெற்றேன். **(பான்கார்டு சா.பொ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6) பின்னர் 19.30 மணிக்கு வழக்கின் எதிரி சதீஷ்குமார் என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நாட்ராயன் மற்றும் குழந்தைசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். 20.30 மணிக்கு மேற்படி எதிரி சதீஷ்குமார் ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களான பணம் ரூ.1,05,000/- , பதிவு செய்யப்படாத புதிய யமஹா பைக் 1, செல்போன் 1, ATM கார்டு 10 ஆகியவைகளை மேற்படி சாட்சிகள் முன்னிலையல் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகள் உரிய கையொப்பம் பெற்றேன்.

7) 21.00 மணிக்கு இந்த வழக்கில் கண்ட எதிரி அலாவுதீன் என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நாட்ராயன் மற்றும் குழந்தைசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். 22.00 மணிக்கு எதிரி அலாவுதீன் ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களான பணம் ரூ.1,00,900/-, செல்போன் 1, கருப்பு நிற மணிபர்ஸ் 1, ATM கார்டுகள் 6, IOB வங்கி பாஸ்புக் 1 ஆகியவைகளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகள் உரிய கையொப்பம் பெற்றேன். **(IOB வங்கி பாஸ்புக் 1 சா.பொ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8) எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து உரிய பதிவேடுகளில் பதிவு செய்தபின்னர் தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கு சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ. 8 முதல் 11 வரை குறியீடு செய்யப்படுகிறது.)**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரானபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

9) சாட்சிகள் நாட்ராயன், குழந்தைசாமி, பொன்னுசாமி, பாரதிராஜா, ஜெயபிரகாஷ், குணசேகரன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.07.2013 ம் தேதி சாட்சிகள் பிரகாஷ் மற்றும் குமார், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.07.2013 ம் தேதி சாட்சிகள் ராஜசேகர், கனகராஜ், இளவரசு, மதன்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.08.2013 ம் தேதி சாட்சிகள் நந்தகுமார், கிருபாகரன், ஆனந்தராஜ், மாதேஷ்வரன், ஜீவானந்தம் மற்றும் வைரவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் தொடர்ச்சியாக புலன்விசாரணை செய்யும் பொருட்டு வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் சிவகுமார் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரானபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.112/2015

PROSECUTION WITNESS L.W.17/P.W.14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் | Caste | : | |
| Father's Name | : | மாரிமுத்து | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

2 ம் எதிரி ஆஜர். 3 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 5 வரையிலான எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 27.08.2024

முதல் விசாரணை

1) நான் தற்போது சித்தோடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 17.07.2013 ம் தேதி, கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது ஆப்பகூடலை சேர்ந்த கிரிசங்கர், த/பெ. ரவிச்சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் படி கருங்கல்பாளைய காவல்நிலைய குற்ற எண்.320/2013 சட்டபிரிவு 406, 420 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து, அதன் அசலையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் எண் 1க்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகத்திற்கு அனுப்பியும், அதன் ஒரு நகலை புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் பி.இரமேஷ் அவர்கள் பார்வைக்கு அனுப்பி வைத்தேன். **(புகார் அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரானபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.